நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சாத்தூர்
முன்னிலை: செல்வி. அ. இலக்கியா பி.பி.ஏ., எல்எல்.பி.,
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 14–ம் நாள் செவ்வாய்க்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.49/2025**

**CNR.No.TNVR070003082025**

CRP Rule 106

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக,<br>சார்பு ஆய்வாளர்,<br>ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய<br>குற்ற எண்.127/2024 |
| குற்றம்சாட்டப்பட்டவர் | முனியசாமி, வயது 45,<br>த/பெ. கந்தசாமி,<br>1/267, தெற்குத் தெரு,<br>ஓ. முத்துச்சாமிபுரம். |
| குற்ற நிகழ்வு நாள் | 02.10.2024 |
| புகார் நாள் | --- |
| எதிரி கைது நாள் | 02.10.2024 (Station Bail) |
| பிணையில் சென்ற நாள் | 02.10.2024 (Station Bail) |
| Commitment | இல்லை |
| விசாரணை தொடங்கிய நாள் | 09.06.2026 |
| விசாரணை முடிந்த நாள் | 09.07.2026 |
| தண்டனை அல்லது தீர்ப்பு நாள் | 14.07.2026 |
| தீர்ப்பு நகல் எதிரிக்கு கொடுத்த நாள் | இல்லை |
| காலதாமதத்திற்கான காரணம் | சாட்சி விசாரணைக்காக தாமதம் |

| | |
|---|---|
| அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு. வசந்த்<br>அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை. |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | --- |

இருதரப்பு வாதுரைகள் கேட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**தீர்ப்புரை**

1. **எதிரி மீது ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய குற்ற எண்.127/2024-ன் கீழ் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு:**

கடந்த 02.10.2024 ம் தேதி 16.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரி பழைய ஏழாயிரம்பண்ணை ஏமராஜ் கோவில் அருகில் வைத்து எவ்வித முறையான அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் எதிரி சுயலாபம் கருதி டாஸ்மாக் முத்திரையுடன் கூடிய 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle -05 எண்ணம், 180 ML அளவு கொண்ட One Man Army xxx Rum Bottle - 05 எண்ணம் ஆகியவற்றை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக பிரிவு 4(1)(C) TNP Act-ன் கீழ் ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS-ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. மேலும் வழக்கின்படி அரசு தரப்பில் எதிரி மீது தாக்கல் செய்த குற்ற அறிக்கை ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Act-ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டு வனைந்து எதிரியிடம் விளக்கி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்து இந்நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார் .

4. அரசு தரப்பிலிருந்து அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4

வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்றுப்பொருள்கள் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.<u>அரசு தரப்பு சுருக்கம் :</u>**

**5.1.** அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரியவரும் சங்கதிகள் என்னவென்றால், அ.சா.1 தலைமை காவலர் அவரது முதல் விசாரணையில், கடந்த 02.10.2024 ம் தேதி மாலை 16.30 மணிக்கு ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஹரிராம் அவர்களுக்கு உதவியாக தானும், தலைமைக்காவலர் (HC–200) திரு.சங்கர்கணேஷ் ஆகியோர்கள் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்மந்தமாக பழைய ஏழாயிரம்பண்ணையில் ரோந்து பணியில் ஈடுபட்ட போது பழைய ஏழாயிரம்பண்ணை ஏமராஜ் கோவில் அருகே வைத்து ரோந்து மேற்கொண்டபோது எதிரி முனியசாமி என்பவர் அரசு எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் அரசு முத்திரையோடு கூடிய 650 ML அளவு கொண்ட SNJ 10000 deluxe super strong beer bottle – 05 எண்ணம், 180 ML அளவு கொண்ட One man army XXX Rum Bottle– 05 எண்ணம் ஆகியவற்றை சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருந்த நபரை கைது செய்து மேற்படி சொத்துக்களுக்கு அத்தாட்சி தயார் செய்தோம் என்றும், மேற்படி அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் தானும், தலைமை காவலர் திரு.சங்கர்கணேஷ் ஆகிய இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களோடு நிலையம் வந்து சொத்துக்களையும் காவல் நிலையத்தில் கொண்டு சென்று வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அத்தாட்சி அ.சா.ஆ.1 என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படமானது வழக்கு சொத்துக்கள் அடங்கிய புகைப்படம் தான். மேற்படி புகைப்படம் அ.சா.ஆ.2 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.2. அ.சா.2 சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 02.10.2024 ம் தேதி 16.30 மணிக்கு ஏழாயிரம்பண்ணைகாவல் நிலைய சார்பு ஆய்வாளராகிய நான் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்மந்தமாக பணியில் இருந்தபோது தனது தலைமையில் முதல் நிலை தலைமைகாவலர் 2067.திரு.ஜோஸ்ராஜாமான்சிங், தலைமைக்காவலர் திரு.சங்கர்கணேஷ் ஆகிய போலீஸ் பார்டிகள் சகிதம் மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக ரோந்து சென்ற போது ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய சரகத்தில் ரோந்து செய்த போது பழைய ஏழாயிரம்பண்ணை ஏமராஜ் கோவில் அருகே வைத்து இவ்வழக்கின் எதிரி முனியசாமி அரசு உரிமமோ, அனுமதியோ இல்லாமல் 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –05 எண்ணம் மற்றும் 180 ML அளவு கொண்ட One Man Army XXX Rum Bottle –05 எண்ணம் மதுபாட்டில்களை சுய லாபம் கருதி கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை கைது செய்து அத்தாட்சி தயார் செய்து சொத்தை கைப்பற்றி எதிரி மற்றும் சொத்துக்களோடு 18.00 வந்து நிலைய குற்ற எண்.127/2024 பிரிவு– 4(1)(C ) of TNP Act ன் கீழ் அ.சா.ஆ.3–ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அசலை அத்தாட்சியோடு இணைத்து கனம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம், சாத்தூருக்கு அனுப்பி வைத்தேன் என்றும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் வழக்கின் எதிரியை திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்ததாகவும், இவ்வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் 1, 2 ஐ விசாரணை செய்து சாட்சிகளிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அதன் நகல்களை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், சாட்சி 1, 2 ஐ இவ்வழக்கின் சம்பவம் பற்றியும், அத்தாட்சி பற்றியும், வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தது பற்றியும் கூறினார்கள் என்றும், மேற்படி அத்தாட்சியில் கைப்பற்றிய 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –05 எண்ணம் மற்றும்

180 ML அளவு கொண்ட One Man Army XXX Rum Bottle –05 ஆகியவற்றை அ.சா.ஆ.4–ஆன படிவம் 91 மூலமாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –05 சா.பொ.1, 180 ML அளவு கொண்ட One Man Army XXX Rum Bottle –05 சா.பொ.2 என்றும், இவ்வழக்கானது பிணையில் விடக்கூடிய வழக்கு என்பதாலும், நிலைய பிணையில் கனம் நீதிமன்றம் அழைக்கும் போது தவறாமல் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையோடு எதிரியை விடுவித்தார் என்றும், தனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் 02.10.2024ம் தேதி 16.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரி பழைய ஏழாயிரம்பண்ணை ஏமராஜ் கோவிலின் அருகே வைத்து எந்த அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் எண்ணம் மற்றும்650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –05 எண்ணம் மற்றும் 180 ML அளவு கொண்ட One Man Army XXX Rum Bottle –05 எண்ணங்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரி மீது பிரிவு 4(1) (C) of TNP Act–ன் கீழ் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டது.

6) அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்களை கு.வி.மு.ச பிரிவு 351(1)(b)–ன் கீழ் எதிரிக்கு விளக்கி கூறி கேட்டபோது எதிரி பொய் சாட்சி என்று கூறியுள்ளார். மேலும் இந்நீதிமன்றத்தால் எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சியங்கள் உண்டா என்று கேட்ட போது இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. <u>அரசு தரப்பு வழக்கறிஞர் வாதம் –</u>

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பு வழக்கிற்கு ஏற்ப மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டு அதற்கேற்ப அ.சா.1 மற்றும் அ.சா.2 தெளிவாக சாட்சியமளித்துள்ளனர் என்றும், பிரிவு 4(1)(C) of TNP Act–ன் கீழான குற்றத்தை நிரூபித்துள்ளது என்றும், இதற்கு சான்றாக அத்தாட்சி தெளிவாக

எடுத்துரைக்கிறது என்றும், பொருட்கள் கைப்பற்றுதலே குற்றச்சாட்டை நிரூபித்துள்ளது. எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**8. <u>எதிரி தரப்பு வழக்கறிஞரின் வாதம் –</u>**

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில் எதிரி காவல் துறை அதிகாரிகளால் வேண்டுமென்றே புள்ளிவிபரக் கணக்கிற்காக பின்னிட்டு போடப்பட்ட பொய் வழக்கு என்றும், தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், அத்தாட்சியானது பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், எனவே எதிரியை விடுதலை செய்யவேண்டும் வாதிட்டார்.

**9) <u>அரசு தரப்பு வழக்கு எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?</u>**

9.1. அரசுத் தரப்பு வழக்கானது, கடந்த 02.10.2024 ம் தேதி 16.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரி பழைய ஏழாயிரம்பண்ணை ஏமராஜ் கோவில் அருகில் வைத்து எவ்வித முறையான அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் எதிரி சுயலாபம் கருதி டாஸ்மாக் முத்திரையுடன் கூடிய 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –05 எண்ணம், 180 ML அளவு கொண்ட One Man Army xxx Rum Bottle – 05 எண்ணம் கொண்ட மதுபாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளார் என்பதாகும்.

1) பிரிவு 4(1) (C ) of TNP Act–ன் கீழ் எதிரிக்கு எதிரான குற்றத்தின் கூறுகளை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா?

2) அரசு தரப்பு எதிரிக்கு எதிராக இவ்வழக்கை அனைத்து நியாயமான சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா?

9.2. மேற்படி பரிசீலனைக்குரிய வினாக்களை ஆராய்வதற்கு முன்னதாக, குற்றவியல் நீதித்துறையின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகிய, குற்றச்சாட்டை நிரூபிக்கும் முழுச் சுமையும் அரசுத் தரப்பின் மீதே அமைந்துள்ளது என்பதையும், எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும்

நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும் என்பதையும் முதலில் குறிப்பிடுவது அவசியமாகிறது. இந்திய சாட்சியச் சட்டம், 1872–ன் பிரிவு 101–இன் படி, ஒரு உண்மையை முன்வைக்கும் தரப்பே அதனை நிரூபிக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளது. எனவே, எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் ஒவ்வொரு கூறையும் சட்டத்திற்கிணங்க அரசுத் தரப்பே உறுதியான சான்றுகளின் மூலம் நிலைநாட்ட வேண்டும்.

9.3. எனினும், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவு 4(1)(C)–இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள குற்றங்களைப் பொறுத்தவரையில், பிரிவு 4(2)(a)–இன் கீழ் வழங்கப்பட்டுள்ள சட்ட அனுமானத்தின்படி, மாறாக நிரூபிக்கப்படும் வரையில் எதிரியே குற்றத்தைப் புரிந்தார் எனக் கருதப்படும். ஆயினும், அத்தகைய சட்ட அனுமானத்தை எதிரிக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு முன்னதாக, வழக்கின் அடிப்படை உண்மைகளை அரசுத் தரப்பு முதலில் நிறுவியிருக்க வேண்டும். குறிப்பாக, வழக்கின் சொத்தாகக் கூறப்படும் மதுபாட்டில்கள் உண்மையில் எதிரியின் வசமிருந்தே கைப்பற்றப்பட்டன என்பதை அரசுத் தரப்பு நம்பத்தகுந்த சான்றுகளின் மூலம் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும்.

9.4. அரசுத் தரப்பு வழக்கறிஞர், எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டமை அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்களின் மூலம் தகுந்த முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே சட்ட அனுமானம் செயல்பட்டு அதனை மறுத்துரைக்கும் சுமை எதிரியின் மீது மாறுவதாகவும் வாதிட்டார். இதற்கு மறுப்பாக எதிரித் தரப்பு, அரசுத் தரப்பு தனது ஆரம்பக்கட்ட நிரூபணச் சுமையையே நிறைவேற்றத் தவறிவிட்டதாகவும், விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் காவல்துறையைச் சேர்ந்த ஆதாயமுடைய சாட்சிகள் மட்டுமே என்பதாலும், சுயாதீன பொதுச் சாட்சிகள் இல்லாத நிலையில் அவர்களது சாட்சியங்களை மட்டும் நம்பி குற்றச்சாட்டை நிலைநிறுத்த இயலாது என்றும் வாதிடப்பட்டது.

9.5. இருதரப்பினரின் வாதங்களையும் பரிசீலித்தபோது, இவ்வழக்கில் கைப்பற்றுகை நடவடிக்கையை அ.சா.2 மேற்கொண்டதாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அதற்கான சாட்சிகளாகக் கூறப்பட்டிருப்பதும் தெரியவருகிறது. இவர்கள் அனைவரும் காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் என்பதால், அவர்களது சாட்சியங்களை வெறுமனே நிராகரிக்க முடியாது என்றாலும், அவர்கள் மட்டுமே வழக்கின் சாட்சிகளாக உள்ள சூழ்நிலையில், அவர்களது வாக்குமூலங்கள் மிகுந்த எச்சரிக்கையுடனும் நுணுக்கமான ஆய்வுடனும் பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக, சம்பவ இடத்தில் பொதுமக்கள் இருந்ததாக சாட்சியங்களிலேயே வெளிப்பட்டுள்ள நிலையிலும், அவர்களில் ஒருவரையாவது சாட்சியாக இணைக்க அரசுத் தரப்பு எந்தவித முயற்சியும் மேற்கொள்ளாதது கவனிக்கத்தக்கதாகும்.

9.6. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில்,தமிழ்நாடு மதுபான நுகர்வோர் விதிகளின்படி ஒரு நபர் 4–1/2 லிட்டர் வரையில் மதுபானங்கள் வைத்துக் கொள்ளலாம் என்றும், 7,8 லிட்டர் வரையில் பீர்பாட்டில்கள் வைத்துக்கொள்ளலாம் என்ற விதி குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். மேற்கூறிய சாட்சியமானது விசாரணையின் தெளிவின்மையையும் அ.சா.1 ன் அறியாமையையும் வெளிப்படுத்துகிறது.

9.7. அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் எந்த மதுபானக் கடையில் இருந்து வாங்கப்பட்டது என்ற விபரத்தினை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை என்றும், எவ்வளவு மதுபான பாட்டில்கள் வாங்கப்பட்டது, விற்கப்பட்டது என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கூறிய சாட்சியம் வழக்கு விசாரணையை சரிவர மேற்கொள்ளாததை எடுத்துரைக்கிறது.

9.8. அரசுத் தரப்பின் முக்கிய விளக்கம் என்னவெனில், பொதுச் சாட்சிகள் கையொப்பமிடவும் சாட்சியமளிக்கவும் மறுத்ததால் அவர்களை

வழக்கில் இணைக்க இயலவில்லை என்பதாகும். எனினும், அவ்வாறு மறுத்ததாகக் கூறப்படும் நபர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டதா, அவர்களை ஆஜர்படுத்துவதற்கான சட்டப்பூர்வ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா அல்லது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 214 அல்லது பிற பொருத்தமான சட்டப்பிரிவுகளின் கீழ் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை நிறுவும் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. இதனால், பொதுச் சாட்சிகளை இணைப்பதற்கான உண்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற முடிவுக்கு வர வேண்டிய கட்டாயம் உருவாகிறது. பொதுச் சாட்சிகள் எளிதில் கிடைக்கக்கூடிய நிலையில் அவர்களைச் சேர்க்கத் தவறியிருப்பது, அரசுத் தரப்பு வழக்கின் மீது கூடுதல் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

9.9. மேலும், பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023–ன் பிரிவுகள் 105 மற்றும் 185–இன் படி, சோதனை மற்றும் கைப்பற்றுகை நடவடிக்கைகள் ஒலி–ஒளி ஊடகங்கள் மூலம் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது சட்டத்தின் கட்டாய விதியாகும். எனினும், தற்போதைய வழக்கில், கைப்பற்றுகை நடவடிக்கை அரசுத் தரப்பு கூறும் முறையிலேயே நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்தும் எந்தவொரு ஒலி–ஒளிப் பதிவும் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்படவில்லை. இவ்விடுபாடு, வழக்குச் சொத்துக்கள் உண்மையில் எதிரியின் வசமிருந்தே கைப்பற்றப்பட்டனவா என்ற சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

9.10. எதிரிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள வணிக நோக்கக் குற்றச்சாட்டைப் பரிசீலிக்கையில், வெறுமனே அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக மதுபாட்டில்களை வைத்திருந்தார் என்ற வாய்மொழிக் கூற்று மட்டும் போதுமானதாகாது. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவு 4(1)(C)–இன் கீழ் வணிக ரீதியான கைவசம் வைத்திருத்தல் என்ற குற்றச்சாட்டை நிறுவுவதற்கு, சில்லறை விற்பனை நடைபெற்றதற்கான நேரடி சான்றுகள்,

பணப்பரிவர்த்தனைக்கான ஆதாரங்கள், கைப்பற்றப்பட்ட ரொக்கப் பணம் அல்லது சுயாதீன பொதுச் சாட்சிகளின் உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் போன்றவை அவசியமாகின்றன. இவ்வழக்கில் அவ்வாறான எந்தவொரு ஆதாரமும் அரசுத் தரப்பால் முன்னிறுத்தப்படவில்லை.

9.11. மேலும், தமிழ்நாடு அரசின் G.O.Ms.No.14, உள்துறை (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை)த் துறையின் கீழ், ஒரு தனிநபர் உரிமமின்றி தனது தனிப்பட்ட நுகர்விற்காக அதிகபட்சமாக 4.5 லிட்டர் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (IMFL) அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானத்தை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளார். இது இருபத்தைந்து 180 மில்லி லிட்டர் பாட்டில்களுக்கு ஒப்பாகும். இதற்கு மேலாக பீர் 7.8 லிட்டரும், ஒயின் 9 லிட்டரும் வைத்திருக்க அனுமதிக்கப்படுகின்றன. எனவே, கைப்பற்றப்பட்ட மதுபானத்தின் அளவு சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வரம்பிற்குள் இருக்கும்போது, அதனை வெறுமனே விற்பனை நோக்கத்துடன் வைத்திருந்தார் என்று கருத முடியாது. அத்தகைய சூழ்நிலையில், வணிக நோக்கத்தை நிரூபிக்கும் தனித்த மற்றும் உறுதியான சான்றுகள் இல்லாதவரை, அந்த மதுபானம் தனிப்பட்ட நுகர்விற்காகவே வைத்திருந்ததாகக் கருதப்பட வேண்டும் என்பதே சட்டத்தின் நோக்கமாகும்.

9.12. ஒரு நபர் அரசு நடத்தும் டாஸ்மாக் கடையில் இருந்து மதுபாட்டில்களை வெளிப்படையாக வாங்கி, அவற்றை வாகனத்தின் ரகசிய அறைகளில் மறைத்து வைக்காமல் சாதாரண முறையில் எடுத்துச் செல்வதும்,

அரசு வரி முத்திரைகள் தெளிவாகத் தெரியும் நிலையில் அவற்றை வைத்திருப்பதும், அவரிடம் சட்டவிரோத மறைமுக நோக்கம் அல்லது குற்றப் பதுக்கல் மனோபாவம் இருந்ததாகக் காட்டுவதில்லை. மாறாக, அவை சட்டப்பூர்வமாக வாங்கப்பட்ட பொருட்கள் என்பதையே வெளிப்படுத்துகின்றன.

9.13. எனவே, மேற்கூறிய சாட்சிய முரண்பாடுகள், சுயாதீன சாட்சிகள் இல்லாமை, கைப்பற்றுகை நடைமுறையில் காணப்படும் குறைபாடுகள், ஒலி–ஒளிப் பதிவு தாக்கல் செய்யப்படாதமை, வணிக நோக்கத்தை நிறுவுவதற்கான உறுதியான ஆதாரங்கள் இல்லாமை மற்றும் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அளவு வரம்பு குறித்த அரசாணையின் விளைவுகள் ஆகிய அனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பரிசீலிக்கும் போது, எதிரி மதுபாட்டில்களை வணிக நோக்கத்துடனோ அல்லது பொதுமக்களுக்கு சட்டவிரோதமாக விற்பனை செய்யும் நோக்கத்துடனோ கைவசம் வைத்திருந்தார் என்பதை அரசுத் தரப்பு அனைத்து நியாயமான சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறியுள்ளது என்பது இந்நீதிமன்றத்தின் உறுதியான கருத்தாகும். ஆகையால், இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன் எதிரிக்கே வழங்கப்பட வேண்டியது சட்டத்திற்கும் நீதிக்கும் ஏற்புடையதாகும்.

10. **<u>தீர்ப்புரை</u>**

முடிவாக, எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Act–ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து பிரிவு 271(1)–BNSS–ன் கீழ் குற்றம்சாட்டப்பட்ட நபரை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**<u>11. வழக்கு சொத்துக்கள்–</u>**

இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.ஆர்.எண்.59/2025–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1– தலா 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –05 எண்ணம் மற்றும் சா.பொ.2 – தலா தலா 180 ML அளவு கொண்ட One Man Army xxx Rum Bottle – 05 எண்ணம் ஆகியவற்றை

மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு உரிய முறையில் அழிக்க உத்தரவிடப் படுகிறது.

**12. <u>பிணைபத்திரம்:</u>**

நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராக எதிரி எழுதிகொடுத்த பிணைபத்திரம் ஏதேனும் இருந்தால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**13.** இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு அல்லது மனு தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவு அல்லது அழைப்பாணையின் பேரில் எதிரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு பிரிவு 481(A) BNSS–ன் கீழ் எழுதி கொடுத்த பிணைப்பத்திரம் இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்குப் பின்னர் தாமாகவே ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் வருடம் ஜுலை மாதம் 14–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

நீதித்துறை நடுவர் எண்.1,
சாத்துார்.

**1. <u>அரசுதரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 – திரு. ஜோஸ்ராஜா மான்சிங் (தலைமை காவலர்)
அ.சா.2 – திரு. ஹரிராம் (சார்பு ஆய்வாளர்)

**2. <u>அரசுதரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.சா.ஆ.1 – அத்தாட்சி

அ.சா.ஆ.2 – பாட்டில்கள் அடங்கிய புகைப்படம்

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – படிவம் 91

**3. <u>அரசுதரப்பு சான்று பொருள்கள் :</u>** –

சா.பொ.1 – தலா 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –05 எண்ணம்

சா.பொ.2 – தலா  தலா 180 ML அளவு கொண்ட One Man Army xxx Rum Bottle – 05 எண்ணம்

**<u>4. அரசு தரப்பில் விசாரிக்கப்படாத சாட்சி–</u>**

1.திரு. சங்கர்கணேஷ் (தலைமை காவலர்)

**5. <u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u> –** இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**சாத்துார்.**

**<u>பிற்சேர்க்கை</u>**

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் 3 விசாரணை தேதிகளுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றம்,
சாத்தூர்.
C.C.No.49/2025
தீர்ப்புரை
நாள் – 14.07.2026.